# சிவம் என்னும் பரம்பொருள்

மாணவர்கள் சிலர் ஒரு மேசையைச் சுற்றி நிற்கிறார்கள். மேசை மீது சில கடதாசித்துண்டுகளும், வேறு பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை, மாணவர்கள் உற்றுநோக்கியபடி, அசைவற்று நிற்கிறார்கள். சிறிது நேரத்தில், மேசை மீதிருந்த கடதாசித்துண்டுகள் பறந்து செல்கின்றன. கடதாசித் துண்டுகள் பறந்து செல்வதற்கான காரணம் என்ன, என ஆசிரியர் மாணவரை வினவுகிறார்.

"காற்று வீசியதால், கடதாசித் துண்டுகள் அடித்துச் செல்லப்படுகின்றன", என்று மாணவர் பதிலளித்தனர்.

"காற்றைக் கண்ணால் கண்டீர்களா?" என்று ஆசிரியர் வினவினார். இல்லை என்று மாணவர் பதிலளித்தனர்.

"காற்று, கண்ணுக்குத் தெரிவதில்லை என்றாலும் அதற்காகக் காற்றே இல்லை என்று நாம் சொல்ல முடியாது. காற்று எம் உடல் மீது படும்போது, அதனை நாம் உணருகின்றோம்," என்று மாணவன் ஒருவன் கூறினான்.

"மரம், செடி, கொடிகள் காற்று வீசுவதினாலேயே அசைகின்றன, என்றாள் இன்னொரு மாணவி. பட்டம் ஆகாயத்தில் பறக்கிறது என்றால், அங்கே காற்று இருக்கிறது என்பதுதானே அர்த்தம்," என்றான் ஒருவன். "காற்று இருப்பதாலேயே நாங்கள் எல்லோரும் உயிர் வாழ்கிறோம்," என்ற விஞ்ஞான உண்மையை மற்றொரு மாணவி எடுத்துக் கூறினாள். அப்பொழுது ஆசிரியர், ஒரு பொருள் கண்களுக்குத் தெரியவில்லை என்பதைக் கொண்டு அந்தப் பொருள் இல்லை என்று சொல்ல முடியாது என்கிறீர்கள் அப்படித்தானே?" என்றார்.

" ஆமாம்" என்றார்கள் மாணவர்கள்.

"பிள்ளைகளே, நீங்கள் இரவில் காணும் சந்திரனையும், நட்சத்திரங்களையும் பகலில் காண்பதில்லையே ஏன்?" என்று ஆசிரியர் கேட்டார்.

அதற்கு மாணவர்கள் "அவை பகலிலும் உள்ளன. சூரியஒளியின் பிரகாசத்தில் அவை எம் கண்களுக்குப் புலப்படுவதில்லை" என்றனர்.

"நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. இன்னுமொரு விடயமும் நான் உங்களுக்குச் சொல்கிறேன். அதாவது மரங்களுக்கும், செடிகளுக்கும் அடியில் உள்ள வேர்களே நிலத்திலிருந்து நீரைப் பெற்று அவற்றை வாழ்விக்கின்றன. இந்த வேர்கள் நிலத்தின் கீழே இருப்பதால் எமது கண்களுக்குத் தெரிவதில்லை. அதனால் வேர்கள் இல்லை என்று சொல்ல முடியுமா?" என்று ஆசிரியர் வினவினார்.

"ஒருபோதும் சொல்ல முடியாது. வேர்கள்தான் தாவரங்களுக்கு ஆதாரம் என்று விஞ்ஞான பாடத்தில் படித்துள்ளோம்" என்று மாணவர்கள் கூறினர்.

"சரி நாம் இப்போது கடவுளைப் பற்றிப் பார்ப்போம்". சிவபெருமானே எமது முழுமுதற் கடவுள். அவரின்றி இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது. காற்று, அடிவேர்கள் என்பன கண்ணுக்குத் தெரியாதது போலவே கடவுளும் எங்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அவரே கண்ணுக்குத் தெரிகின்ற இந்த உலகத்தைப் படைத்துக் காத்து வருகின்றார். அவர் என்றும் உள்ளவர்; பிறப்பு, இறப்பு அற்றவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்.

சிவபெருமானுக்குச் சக்தி உமாதேவியார். அவர் சக்தியுடன் இணைந்தே இருப்பவர்.

சிவபெருமானே எங்கள் எல்லோரினதும் தந்தையும், தாயும், சுற்றமும், துணையுமாக உள்ளார். நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் எல்லோர் மீதும் நாம் அன்பு செலுத்தி வாழ்தலையே அவர் மிகவும் விரும்புபவர். அதுவே சிறந்த வழிபாடும் ஆகும்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

## "சிவக்கொழுந்தைச் சிரந் தாழ்த்தி வேண்டுவோமே"

**திருமந்திரம்**

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

- திருமூலர் -

### பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) கண்களுக்குத் தெரியாத காற்றை நாம் எவ்வாறு உணருகிறோம்?
(2) பகலில் சந்திரனும் நட்சத்திரங்களும் ஏன் நமது கண்களுக்குப் புலப் படுவதில்லை?
(3) எமது முழு முதற் கடவுள் யார்?
(4) கடவுள் எப்படிப்பட்டவர்?
(5) இறைவன் விரும்பும் வழிபாடு யாது?
(6) சிவபெருமானது சக்தியாக விளங்குபவர் யார்?

### செயற்பாடு

* சிவபெருமானின் மறுபெயர்களைக் கேட்டறிந்து எழுதுங்கள்.